DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC 25/2023

Prosecution witness – PW 4

| | | |
|---|---|---|
| Name | : திரு.சண்முகம் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

Accused present.

24.07.2025– 03.45 PM

முதல் விசாரணை:–

1. நான் கடலாடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு வழக்கு சம்பவமாக தெரியும்.

2. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் வீட்டின் அருகிலிருள்ள செல்லப்பாண்டியன் என்பவரது வீட்டில் திருடுபோனது சம்மந்தமாக போலீசார் வந்து விசாரித்தார்கள். செல்லப்பாண்டி வீட்டில் நான்குமால் கேட்டு போலீசார் எழுதினார்கள். அதில் என்னிடம் சாட்சியாக கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் பூமிநாதன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார், அந்த பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –

1. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. போலீசார் எதற்காக என்னை விசாரித்தார்கள் என்றால் தங்க பொருள் காணாமல் போனது சம்மந்தமாக விசாரித்தார்கள். போலீசாரிடம் கையெழுத்து போட்ட

பேப்பரில் நான் முதலில் கையொப்பம் செய்தேனா என்னுடன் வந்தவர் முதலில் கையெப்பம் செய்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எழுதிய பேப்பரில் கையெழுத்து செய்யவில்லை படம் வரைந்து பேபரில் கையொப்பம் செய்தேன். வழக்கின் புகார்தாரர் என்னுடைய உறவினரா என்றால் இல்லை. பக்கத்து வீட்டுக்காரர். நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. என்னை இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்கிலும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரர் என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்ல என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி